மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகளில் அடர்த்தியான கிளைகளைக் கொண்ட மரங்களை நட்டாலே போதும். பொதுவாக, அடர்த்தியான கிளைகளைக் கொண்ட மரங்களை நடுவதன் மூலமாக கரியமில வாயுவின் வெளியேற்றம் குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தட்பவெப்ப நிலை மாற்றம் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியை முழுவதுமாக பாதிக்கிறது. ஊரகப் பகுதிகளில் ஏற்றுக்கொள்ளத்தக்க தட்பவெப்ப நிலை மாற்றத்தைச் செயல்படுத்தும் 4 மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தமிழ்நாட்டில் இதற்கான செயல் திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. தமிழக அரசால் அமைக்கப்பட்ட செயலாக்கக் குழு, 1. நீராதாரம் 2. நீடிக்கத்தக்க வேளாண்மை 3. நிலையான வசிப்பிடம் 4. வனம் மற்றும் பல்லுயிர் பெருக்கம் 5. ஆக்கத்திறன் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி 6. கடலோர மேலாண்மை 7. அறிவாற்றல் மேலாண்மை ஆகிய 7 பிரிவுகள் குறித்து ஆய்வு செய்து கடந்தகால, நிகழ்கால நிகழ்வுகள் மற்றும் எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய தட்பவெப்ப நிலையை ஏற்றுக்கொள்வதற்கும், அதன் பாதிப்பைக் குறைப்பதற்குண்டான வழிமுறைகள் கண்டறியப்பட்டுள்ளன. மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு 2013-2014 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் அறிக்கை தயாரிக்க ரூ.30 இலட்சம் வழங்கியுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 447, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

447—

தூர் வாருதல்

***6120—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டத்திலுள்ள தாசம்பட்டி அணை, நாகாவதி அணை, சஞ்சீவராயன்கோயில் அணை மற்றும் கூனம்பள்ளம் அணை ஆகியவற்றைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

2013 மே 9]

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம், தாசம்பட்டி அணை, நாகாவதி அணை, சஞ்சீவராயன் கோயில் அணை, கூனம்பள்ளம் அணை ஆகியவை தூர் வாரப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். நாகாவதி அணை தவிர, தாசம்பட்டி, வரட்டுப்பள்ளம், சஞ்சீவராயன் கோயில், கூனம்பள்ளம் ஆகியவை ஏரிகளாகும். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து தொகுதிக்கு இரண்டு ஏரிகள் தூர் வாரும் திட்டத்தின்கீழ் கடந்த 2008-2009 ஆம் ஆண்டில் தலா ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் கூனம்பள்ளம் மற்றும் சஞ்சீவராயன் கோயில் ஏரிகள் தூர் வாரி சீரமைக்கப்பட்டன. இந்த ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டிலே வரட்டுப்பள்ளம் ஏரியினைத் தூர் வார மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்து, நாகாவதி அணையினைத் தூர் வாருவதற்குத் தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக் கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தில் தாசம்பட்டி அணை, சஞ்சீவராயன் கோயில் அணை, நாகாவதி அணை, கூனம்பள்ளம் அணை ஆகியவை சிறிய ஆற்றின் குறுக்கேயும், ஓடைகளின் குறுக்கேயும் வனத்தையொட்டி அமைக்கப்பட்டுள்ள சிறிய அணைகளாகும். விவசாயிகளின் பாசனத்திற்கும், நிலத்தடி நீர்ப் பெருக்கத்திற்கும், கால்நடைகள் மற்றும் வன விலங்குகளுக்கு நீர் ஆதாரமாகவும், நில அரிப்பைத் தடுக்கவும், மழைக்கால நீரைச் சேமித்து வைக்கவும் பெரும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. அணைகள் கட்டப்பட்ட காலத்திலிருந்து அவை தூர் வாரப்படாத காரணத்தால், மண் மேடாகி, தண்ணீர் மிகக் குறைந்த அளவே தேங்குகின்றது. எனவே, இதனை ஆழப்படுத்தி நீரைத் தேக்கவும், அதன் கால்வாய்களைச் சீர்படுத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன

செய்வார்களா என்பதையும், கூனம்பள்ளம் அணைக்கு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட பணம் செலவு செய்யப்படாமல் திரும்ப அளிக்கப்பட்டு, நிறுத்திவிட்டார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதைச் சீர்படுத்த ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து அணைகளையும் தூர் வார வேண்டும்; குளங்களைத் தூர் வார வேண்டுமென்று உத்தரவிட்டதன்மூலம் ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அணைகளில் தூர் வாருவதோடு, அணைகளில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் தங்களுடைய நிலத்திற்குப் பயன்படுத்தும் வகையில், உழவர்கள் அதனை எடுத்துக்கொள்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

அதேபோன்று, பாப்பாரப்பட்டி சாமனேரி அணை, மத்தலப்பள்ளம் அணை, திண்ணபெல்லூர் அணை, மூலபெல்லூர் அணை ஆகிய சிறிய அணைகளைத் தூர் வாரிச் சீர்படுத்தி நீரைத் தேக்கி வைக்கும்வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். திண்ணபெல்லூர், மூலபெல்லூர், கரியமுனியப்பன் கோயில் அருகே அமைக்கப்பட்டுள்ள மத்தலப்பள்ளம் அணையின் பணி நிறைவடைந்து ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாகிறது. அதன் கால்வாய்ப் பணிகள் முழுமையடையாத காரணத்தால்,

2013 மே 9]

பயன்பாட்டிற்கு வராமல் இருக்கின்றது. அதையும் நிறைவு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் உள்ள அனைத்து வேலைகளையும் இந்த ஆண்டே முடிக்க வேண்டுமென்ற உறுதியோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எனவே, தருமபுரி மாவட்டம் வறட்சியான மாவட்டம் என்பதைக் கருத்திலே கொண்டு, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.*

திரு. இரா. அண்ணாதுரை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, செல்லூர் கண்மாயைத் தூர்வார வேண்டுமென அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறார்கள்; அனைத்து அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. இன்றைக்கு அந்தப் பகுதியில் நிலத்தடி நீர் 900 அடிக்குக் கீழே சென்றுவிட்டது. எனவே, அந்தக் கண்மாயைத் தூர் வாரினால், நீர் மட்டத்தினுடைய அளவு உயருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏற்கெனவே, நம்முடைய மதுரை (வடக்கு) சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ஏ.கே. போஸ் அவர்களும், நானும், நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதுகுறித்து கொண்டு சென்றிருக்கின்றோம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை, செல்லூர் கண்மாயைத் தூர்வாரி, நிலத்தடி நீரை மேன்மைப்படுத்துவதற்கு முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் அந்த செல்லூர் ஏரியில், மாநகராட்சியினுடைய கழிவுநீர்தான் அதிகமாகத் தேங்கியிருக்கிறது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும், மரியாதைக்குரிய மாண்புமிகு அண்ணன் திரு. ஏ.கே. போஸ் அவர்களும் என்னிடம் வந்து கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பணிகளைச் செய்வதற்குண்டான ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பின், இந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.*

திரு. அ. அஸ்லம் பாஷா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆம்பூர் நகரத்திற்கு முக்கிய குடிநீர் ஆதாரமாக இருக்கக்கூடிய ஆனைமடுவு அணை ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அதற்குப் பிறகு அந்த அணை தூர் வாரப்படவில்லை. அந்த அணையில் களிமண் நிறைந்து கிடப்பதால்--மழைக் காலங்களில் நாயக்கன் ஏரி மலையிலிருந்து வருகின்ற தண்ணீர்தான் அங்கு சேமித்து வைக்கப்படுகிறது. நகருக்கு மிக முக்கியமான குடிநீர் ஆதாரமாக இருக்கக்கூடிய அந்த ஆனைமடுவு அணையைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, கொள்ளளவை இன்னும் அதிகப்படுத்தினால், ஆம்பூர் நகரத்தில் நிலவக்கூடிய குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும்--மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணையைத் தூர் வாரி, ஆழப்படுத்தி, அகலப்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, இந்த நிதியாண்டிலேயே அந்தப் பணிகள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள் பேசும்போது, வண்டல்மண்ணை விவசாயிகள் நிலத்திற்கு

எடுத்துச் சென்று பயன்படுத்த அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். வண்டல்மண்ணை விவசாயிகள் எடுப்பதற்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. எப்பொழுது வேண்டுமானாலும் அதை எடுத்துக் கொள்ளலாம் என்பதை இந்த நேரத்திலே தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்டிருக்கிற 10 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களுடைய பயனைக் கருத்திலே கொண்டு, பெருமாள் ஏரியைத் தூர் வாரி, ஆழப்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் கடலூரில் நடைபெற்ற பணிகளைப் பார்வையிடச் சென்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். இந்த ஆண்டு அந்த ஏரியைத் தூர் வாருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 448, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

448—

கால்நடை மருத்துவக் கல்லூரி

***4984—திருமதி க. அழகுவேலு:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—